# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 -2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 2

சுட்டெண்:............................................................... நேரம்: 90 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

பாவலனுக்குப் பெரியவர் நன்றி கூறினார்.

(நன்றி, விடை, வணக்கம்)

1. தூயவன் நாடகம்__________________ .

   (ஆடுவான், நடிப்பான், வரைவான்)

2. மரங்கள் துளிர்க்கும் காலம் __________________ .

   (கோடைகாலம், இலைஉதிர்காலம், இலைதளிர்காலம்)

3. தாய் சொல்லைத் __________________ .

   (தட்டாதே, கேட்காதே, பேசாதே)

4. பாரி __________________ உலாவச் சென்றான்.

   (வண்டியில், தேரில், பேருந்தில்)

5. வானில் வட்டம் இட்டுப் பறந்த பறவை __________________

   (கழுகு, காகம், பருந்து)

6. இன்று வெள்ளிக்கிழமை நேற்று __________________ .

   (திங்கட்கிழமை, சனிக்கிழமை, வியாழக்கிழமை)

7 __________________ பள்ளிக்குச் சென்றாள்.

   (தம்பி, தங்கை, அண்ணா)

8. குயில் ______________________ .

(கரைகின்றது, கூவுகின்றது, அகவுகின்றது)

9. மான் ஓடியது. மான்கள் ______________________ .

(ஓடினர், ஓடின, ஓடியது)

10. த் + எ ______________________ .

(தெ, தே, தொ)

புள்ளிகள் 10

**2) கீறிட்ட இடங்களில் விடுபட்ட சரியான எழுத்தை எழுதுக.**

**எ - கா**

தமி __ழ__ ர் (ழ, ள)

1.ப _____ ளி (ல், ள்)

2. சி _____ வர் (ரு, று)

3. தவ _____ (ளை, லை)

4. பம்ப _____ ம் (ற, ர)

5. ஆசி _____ யர் (ரி, றி)

6. பூம்ப _____ (னி, ணி)

புள்ளிகள் 12

3) **சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள சொல்லியமாக எழுதுக.**

**எ - கா**

முட்டை / இட்டது / காகம்

காகம் முட்டை இட்டது _______________ .

1. ஒலிகள் / பறவைகளின் / கேட்கும்

_______________ .

2. செதுக்குவாள் / எழிலி / சிற்பம்

_______________ .

3. பாரி / உடையவன் / இரக்கம்

_______________ .

4. குஞ்சைத் / பருந்து / தூக்கியது

_______________ .

5. தாய்மொழி / எங்கள் / தமிழ்

_______________ .

புள்ளிகள் 10

4) **உறுப்பமைய எழுதுக.**

கதிரவன் கிழக்கில் காலிக்கும்.

_______________

புள்ளிகள் 03

5) **ஒரு சொல்லில் விடை எழுதுவோம்.**

**எ - கா**

மாதவி நடனம் ஆடினாள்.

யார் நடனம் ஆடினாள்?

மாதவி ________________ .

1. சிறுவன் பந்தை அடித்து விளையாடினான்.
   சிறுவன் எதை அடித்து விளையாடினான்?

   ________________ .

2. குயிலி அஞ்சல் எழுதினாள்.
   குயிலி என்ன எழுதினாள்?

   ________________ .

3. தம்பி அப்பாவுடன் கடைக்குச் சென்றான்.
   தம்பி யாருடன் கடைக்குச் சென்றான்?

   ________________ .

4. காலையில் சேவல் கூவும்
   சேவல் எப்பொழுது கூவும்?

   ________________ .

5. அம்மா நான்கு தோசைகள் தந்தார்.
   அம்மா எத்தனை தோசைகள் தந்தார்?

   ________________ .

புள்ளிகள் 10

6) **சொற்றொடர்களைப் பொருத்தமாக இணைக்குக.**

**எ - கா**

| | |
|---|---|
| சங்கிலியன் ஒரு | எழுதினார் . |
| நாம் பெரியோரை | பாடுகின்றான். |
| ஔவையார் மூதுரையை | தரும். |
| தம்பி பாட்டுப் | மதிப்போம் . |
| கலைகள் மகிழ்ச்சியைத் | பெய்யும். |
| மழை | வீரன். |

புள்ளிகள் 10

7) **மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாம்பு | மாலையை | ~~மரத்தில்~~ | காகம் | தூக்கியது | பொந்தினுள் |

**எ - கா**

காகம் ஒன்று மரத்தில் கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அந்த மரத்தின் அடியில் உள்ள பொந்தில் __________ ஒன்றும் வாழ்ந்தது. பாம்பு காகம் இடும் முட்டைகளைக் குடித்தது. அதனால் __________ மனம் வருந்தியது. அது திட்டம் ஒன்று போட்டது. காகம் செல்வந்தரின் மகளின் மாலையைத் __________. அதைப் பாம்பு இருந்த __________ போட்டது. உடனே வேலையாள் பாம்பைக் கொன்று __________ எடுத்தான். அதன் பின்பு காகம் முட்டைகளை இட்டுக் குஞ்சுகள் பொரித்தது. குஞ்சுகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

புள்ளிகள் 10

8) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| நா | ன் | கு | கி | ளி | ம |
| அ | ன் | ன | ம் | இ | ர |
| கு | யி | ல் | | ர | ங் |
| ஒ | ன் | ப | து | ண் | கொ |
| ஏ | கொ | க் | கு | டு | த் |
| மு | ப | ரு | ந் | து | தி |
| ப | த் | து | எ | ட் | டு |

| எண்கள் | பறவைகள் |
|---|---|
| எ - கா நான்கு | மரங்கொத்தி |
| 1. ______ | 1. ______ |
| 2. ______ | 2. ______ |
| 3. ______ | 3. ______ |
| 4. ______ | 4. ______ |
| 5. ______ | 5. ______ |

புள்ளிகள் 10

9) படத்துக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதுக.


எ - கா




கிளி கூண்டுக்குள் __இருக்கிறது__ .



அப்பா தொலைக்காட்சி ______________ .



மீன் நீரில் ______________ .



குதிரைகள் ______________ .



தங்கை உணவு ______________ .



சிறுவர் பந்து ______________ .

புள்ளிகள் 10

10. படத்தைப் பார்த்து மூன்று சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

புள்ளிகள் 15